**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில்** 08.06.2020 **திங்கள் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2020-2021 திட்டத்தின் கீழ் தார்சாலை புதுப்பிக்கும் பணிகள் அகமுடையர் தெரு - வார்டு-3, மருத்துவமனைத் தெரு வார்டு - 7, சிங்களாந்தி தமிழர் தெரு வார்டு - 17 ஆகிய சாலைகளும், பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி வேதாரண்யம் சாலை பழைய உரக்கிடங்கு சாலை - வார்டு - 16, ஜீவா தெரு - வார்டு - 19, நந்தவனக்குளத் தெரு - வார்டு - 5, நரிக்குறவர் காலனி - வார்டு -6, சிங்களாந்தி ஆதிதிராவிடர் தெரு ஆகிய சாலைகளிலும் மேற்கொள்ளும் பணியினை ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>(ந.க.எண். 1078/2020/இ-1)</u>**<br><br>. | 178 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **2.** | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் வார்டு எண் 21 முத்துப்பேட்டை சாலையிலுள்ள செக்கடி குளத்தினை தூர்வாரி சுற்றுச்சுவர் மற்றும் படித்துறை கட்டும் பணிகளை தமிழ்நாடு சட்டமந்னற மான்ய கோரிக்கையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி நீர் நிலைகள் மேம்பாடு செய்யும் திட்டத்தின்கீழ் ரூ.75.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.** 1158 /2020/**இ**1**)** | **179** | **அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர், திருத்துறைப்பூண்டி
நகராட்சி.

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்பு கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில்** 30.06.2020 **செவ்வாய்க் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1. | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன்-2020 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 180 | **பதிவு செய்யப் பட்டது** |
| 2. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் கீழ்காணும் இனங்களுக்கு 2020-2021ம் நிதி ஆண்டிற்கு உத்தேச செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 181 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்ப ட்டது** |

| | | வ.எண் | பொருள் விபரம் | உத்தேச செலவினம் நிதி ஒதுக்கீடு தொகை ரூ.இலட்சத்தில் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | பொது சுகாதார பிரிவு வாகனங்கள் பராமரித்தல் தகுதி சான்று பெற, காப்பீடு தொகை செலுத்துதல் மற்றும் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவைகளுக்கான செலவின தொகை | ரூ.7.00 | | | |
| | | 2 | பொறியியல் மற்றும் பொது சுகாதார பிரிவு வாகனங்கள் புகை மருந்து தெளிப்பான் மற்றும் ஜெனரேட்டர்களுக்கு எரிபொருள் செலவினங்களுக்கு | ரூ.8.00 | | | |
| | | 3 | துப்புரவு தளவாட சாமான்கள் , கிருமி நாசினிகள், நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் மற்றும் இதர தொற்று நோய் நீக்கும் மருந்துகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கி கொள்ள செலவினங்களுக்கு | ரூ.10.00 | | | |
| | | 4 | கொசு புழு மருந்து, கொசு ஒழிப்பு புகை தெளிப்பான் மருந்துகள் வாங்கிட ஆகும் செலவினங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கி கொள்ள | ரூ.5.00 | | | |
| | | 5 | இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள், சீருடைகள், காலனிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும் மருத்துவ முகாம் நடத்திட ஆகும் செலவினங்கள் | ரூ.3.00 | | | |
| | | 6 | திடக்கழிவு மேலாண்மை விதி 2016ஐ செயல்படுத்துதல் உரக்கிடங்கு பராமரிப்பு விழிப்புணர்வு மற்றும் முகாம்கள் பணிகள் | ரூ.5.00 | | | |

| | | | |
|---|---|---|---|
| | <table><tr><td></td><td>மேற்கொள்ளவும் மற்றும் மருந்துகள் வாங்கிட ஆகும் செலவினங்களுக்கு</td><td></td></tr></table><br>**அலுவலக குறிப்பு**<br>1. வரிசை எண் 1 முதல் 6 வரையுள்ள செலவினம் அங்கீகரிக்கலாம்.<br>2. 2020-2021ம் ஆண்டிற்கு 38.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1202/2020/எச்-1)** | | |
| **3.** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் SBM 8-ஆவது மாநில உயர்நிலைக்குழு பரிந்துரையின்படி பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் 10 எண்ணிக்கையும், இலகு ரக வணிக வாகனங்கள் (TATA ACE) 2 எண்ணிக்கையும் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண்.1191/P-3/2019 நாள்.21.01.2019ன் படி 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 18.02.2019ல் வாகனங்கள் வாங்க பணி உத்தரவு வழங்கப்பட்டது. இதில் பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் 10 எண்ணிக்கை பணி உத்தரவு வழங்கிய நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்டு அதற்குரிய பட்டியல் தொகையும் வழஙகப்பட்டுள்ளது. LCV வாகனங்கள் 2 எண்ணிக்கை சப்ளை செய்வதற்கு Chassis வாங்குவதற்கான தொகை ரூ.8,97,930/- செலுத்தக் கோரி பணி உத்தரவு வழங்கப்பட்ட லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனம் கடிதம் அளித்திருந்தனர். இந்நிலையில் நகராட்சியின் நிதிநிலை மிகவும் குறைவாக இருந்ததாலும் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விடுவிக்கப்படாததாலும் அந்நிறுவனத்திற்கு மேற்கண்ட தொகையினை வழங்க இயலவில்லை. இந்நிலையில் BS4 ரக வாகனங்களை தடை செய்து அதற்கு பதிலாக BS6 ரக வாகனங்களை மட்டும் உற்பத்தி செய்து விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டதன்படி BS4 ரக வாகன உற்பத்தி நிறுதப்பட்டு அந்த வாகனங்களை வாங்க இயலவில்லை. மத்திய அரசின் 35% நிதி 10.22 இலட்சமும், 18.09.2019 அன்றும், மாநில அரசின் 55% | **182** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | நிதி 16.06 இலட்சம் 19.03.2020 அன்றும் விடுவிக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் பணி உத்தரவு வழங்கப்பட்ட லட்சுமி ஆட்டோ நிறுவனம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு வாகனங்களை தற்போது வழங்க இயலாது எனவும், புதிதாக உற்பத்தி செய்யப்படும் BS6 ரக வாகனங்களின் விலை அடிப்படையிலேயே சப்ளை செய்ய இயலும் என கடிதம் மூலம் தெரிவித்ததன் அடிப்படையில் புதிய BS6 வாகனங்களுக்கான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் 1 வாகனத்திற்கான விலை மதிப்பீட்டு விலையை விட ரூ.1.75 இலட்சம் கூடுதலாக உள்ளது. அதன்படி 2 வாகனங்களுக்கான கூடுதல் விலை ரூ.3.50 இலட்சம் ஆகும். எனவே திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதி 2 LCV வாகனங்கள் வாங்குவதற்கான கூடுதல் செலவினம் ரூ.3.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண். 68/2019/இ-1)** | | |
| **4.** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான மீன்நாளங்காடி மற்றும் கசாப் கடைகளின் குத்தகை காலம் 31.03.2020ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2020 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. | **183** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| வ. எண். | குத்தகை இனம் | குத்தகைதாரர்கள் பெயர் (ம) முகவரி | 2019-20 ஆம் ஆண்டு குத்தகை தொகை | 2020-21 5% உயர்வுக்கு பின் ஆண்( குத்தகை |
|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | தொகை ரூ. | |
| 1. | மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | திரு.எஸ்.கணேசன், த/பெ.டி.ஆர்.சம்மந்தம், பொன்னையன் செட்டித் தெரு, திருத்துறைப்பூண்டி. | 202656/- | 212796/- | |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2018-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2020 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 6966/2017/அ-2)**

| | | | |
|---|---|---|---|
| **5.** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் தொட்டிக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமையின் குத்தகை காலம் 31.03.2020ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2020 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. | **184** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| வ. எண். | குத்தகை இனம் | குத்தகைதாரர்கள் பெயர் (ம) முகவரி | 2019-20 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ. | 2020-21 5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ஆடு அறுக்கும் தொட்டிக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமை | திரு.எஸ்.பசுபதி கணேஷ், த/பெ.சோம சுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப் பூண்டி. | 38856/- | 40800/- |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2018-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2020 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 6966/2017/அ-2)**

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>6.</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங்களுக்கும் தெரு ஓரங்களில் தள்ளுவண்டி மற்றும் சைக்கிள்களில் வியாபாரம் செய்யும் இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை-ன் குத்தகை காலம் 31.03.2020ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2020 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>குத்தகை இனம்</th><th>குத்தகைதாரர்கள் பெயர் (ம) முகவரி</th><th>2019-20 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th><th>2020-21 5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங்களுக்கும், தெரு ஓரங்களில் தள்ளுவண்டி மற்றும் சைக்கிள்களில் வியாபாரம் செய்யும் இனங்களுக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமை</td><td>திரு.எஸ்.பசுபதி கணேஷ், த/பெ.சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப் பூண்டி.</td><td>426300/-</td><td>447624/-</td></tr>
</table>
</td>
<td>185</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2018-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2020 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண். 6966/2017/அ-2)** | | |

ஒம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.